முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள்.23.02.2026

O.S No. 198/2022

வா.சா.1-சந்திரபாபு

1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

வழக்கு சொத்தில் உள்ள கோயில் 4 தலைமுறையாக உள்ளது என்றால் சரியல்ல 1992 ல் எனது தகப்பனாரால் கட்டப்பட்டது. எனது அப்பா ஆசிரியராக பணிபுரிந்தார். அவரை வாத்தியார் செண்பகலிங்கம் என அழைப்பார்கள். வழக்கு சொத்தின் பழைய சர்வே எண்.4387 ஆகும். அதன் முழு விஸ்தீரணம் 12 சென்ட் ஆகும். அதில் எனது அப்பா கிரயம் வாங்கியது 4 1/8 சென்ட் சொத்தை விலைக்கு வாங்கினார். அதனை விலை வாங்கியது நல்லதம்பியிடம் மட்டும் என்றால் சரி. நல்லதம்பிக்கு பாண்டியன் ராமையா என்ற இரு சகோதரர்கள் உள்ளார்கள். நல்லதம்பி கிரயம் கொடுத்த சொத்து அவருக்கு பூர்வீக சொத்து என்றால் எனக்கு தெரியாது.

எனது அப்பாவிற்கு நல்லதம்பியின் பாகத்தை தவிர வேறு சொத்துக்களில் எங்களுக்கு உரிமைஇல்லை என்றால் சரியல்ல 1955 ல் எனது தாத்தா கிரயம் வாங்கினார். எனது தாத்தா கிரயம் வாங்கிய விவரத்தை பிராதிலோ நிருபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை அந்த கிரய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாத்தா கிரயம் பெற்ற சொத்தானது நல்லதம்பியிடம் இருந்து கிரயம் பெற்ற சொத்தின் தெற்கு பக்கம் அமைந்துள்ளது. தெற்கு பகுதியில் எனது தாத்தா கிரயம்வாங்கிய பகுதி 4 ¾ சென்ட் ஆகும். தாத்தாவின் பெயர் சுப்பையா நாடார் ஆகும். 1969 ல் கிரயபத்திரத்தில் தெற்கு எல்லையாக எனது தாத்தா சுப்பையாவின் சொத்து காட்டப்பட்டு இருக்கும் என்றால் சரி. எங்கள் குடும்பத்தில் குமாரசாமி என்று யாரும் கிடையாது என்றால் சரி.

வா.சா.ஆ.2 கிரய பத்திரத்தில் தெற்கு எல்லையாக குமாரசாமி சொத்து காட்டப்பட்டுள்ளதென்றால் சரி. வா.சா.ஆ.1 உயிலின் அடிப்படையில் நான் வழக்கு சொத்தில் உரிமை கேட்கிறேன் என்றால் சரி. கிரய ஆவணத்தின் மூலமும் கேட்கிறேன். கிரய ஆவணம் என் பெயரில் இல்லை என்றால் சரி. அசல் உயில் பத்திரம் எனது அண்ணன் வசம் உள்ளது. வா.சா.ஆ.1

உயிலில் எனது அப்பா 1969 கிரய ஆவணத்தின் அடிப்படையில் உரிமை கிடைத்ததாக சொல்லியுள்ளார் என்றாலும் பூர்வீக உரிமை சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல பூர்வீக உரிமை மூலமாக கிடைத்ததாக சொல்லியுள்ளார். சாட்சி உயில் ஆவணத்தை படித்து பார்த்து விட்டு சிறிய எழுத்துக்களாக இருப்பதால் அவரால் படிக்க முடியவில்லை என கூறுகிறார். உயிலில் சி பட்டிகை சொத்து விவரத்தில் சர்வே எண்,75/1 ல் 12 ½ சென்ட்டில் என் வீதம் 9 சென்ட்டில் 1/4 பாகம் வீதம் 2.250 சென்ட் சொல்லப்பட்டுள்ளதென்றால் சரி. எனக்கு உயிலில் டி பட்டிகை சொத்து ஒதுக்கப்பட்டதென்றால் சரி.

நான் இந்த வழக்கில் எனக்காகவும் மற்ற 4 வாதிகளுக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன். வழக்கு சொத்து உட்பிரிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. பூமியில் வழக்கு சொத்து ஒரே கிடப்பாக உள்ளது தனித்தனியாக பிரிக்கப்படவில்லை. 12 சென்ட்டில் 3 ½ சென்ட்டை யார் அனுபவித்து வருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் ஆரமரமும் ஒரு குழாய்கிணறும் ஒரு கோயிலும் உள்ளது. கோயில் பகுதியானது ஒரு கட்டிடமும் கட்டிடம் அல்லாத 21 பீடமும் உள்ளதென்றால் சரி. வா.சா.ஆ.1 உயிலில் கோயில் விவரத்தை எழுதவில்லை என்றால் சரி. உயிலில் சொத்தை கிழமேலாக நான்காக பிரித்தாரா தென்வடலாக பிரித்தாரா என்றால் பிரிவின்றி சொத்தை எழுதி வைத்துள்ளார். மொத்த 12 ½ சென்ட் இடத்திற்கு வடக்கு பக்கம் பொதுப்பணித்துறையின் கால்வாய் உள்ளது.

9 சென்ட்டின் மேற்குபக்கம் குமாரசாமியின் சொத்து உள்ளது. சத்தியமூர்த்தி என்பவர் குமாரசாமியின் மகன் ஆவார். உயிலில் 9 சென்ட்டின் சொத்தின் வடக்கே ஆறு என்று சொல்லப்பட்டுள்ளதென்றால் சரி. 75/1 ல் சத்தியமூர்த்திக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரி. உயிலில் மேற்கு மற்றும் தெற்கு எல்லையில் சத்தியமூர்த்தியின் பங்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் சரி. 12 ½ சென்ட்டில் என் அப்பாவின் 9 சென்ட் எந்த பகுதியில் உள்ளது என தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ல் உள்ளது. பிராது சொத்து விவரத்தில் 9 சென்ட் எந்த பகுதியில் அமைந்துள்ளது என தெளிவாக சொல்லவில்லை

என்றால் சரி. 75/1ல் கிழக்கற்றத்தில் ரோடு செல்கிறது என்றால் சரி. சிதம்பரவடிவு யார் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 ல் கிரயம் சொத்தின் கிழக்கு பக்கம் சிதம்பரவடிவு சொத்து இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் சரி. சிதம்பரவடிவிடம் இருந்து நானோ எனது அப்பாவோ சொத்தை கிரயம் வாங்கவில்லை என்றால் சரி.

சிதம்பரவடிவு என்பவர் நல்லதம்பியின் சகோதரர் ராமையாவின் மனைவி என்றால் தெரியாது. வா.சா.ஆ.2 ல் எனது அப்பா கிரயம்பெற்ற சொத்து கிழக்கில் இருந்து மேற்காக இரண்டாவது சொத்து என்றால் சரி. 12 ½ சென்ட்டில் கிழக்கில் இருந்து மேற்காக இரண்டாவது பங்கில் ஆலமரமும் அதற்கு கிழக்கே கோயில் கட்டிடமும் உள்ளது என்றால் சரி. சாட்சி தற்போது எல்லாமே நடு பங்கில் இருப்பதாக கூறுகிறார். வழக்கு சொத்தில் ஆழ்துளை கிணறு இருப்பதா நான் கூறுவதற்கு பிராதிலோ நிருபண வாக்குமூலத்திலோ சங்கதிகள் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல மின்னிணைப்பு தாக்கல் செய்துள்ளேன்.அந்த மின்னிணைப்பு கோயிலுக்கும் ஆழ்துளைகிணறுக்கும் சேர்த்து எடுக்கப்பட்டது. ஆழ்துளைகிணறுக்கும் விவசாய மின்னிணைப்பு கொடுக்கப்படும் என்றால் சரி. வா.சா.ஆ.9 முதல் 11 வரையிலான மின்கட்டண ஆவணங்கள் வழக்கிற்கு பிந்தைய ஆவணங்கள் என்றால் சரி.

வா.சா.ஆ.4 பட்டாவில் பாண்டியன், ராமையா நாடார்,ஹரிகிருஷ்ண பெருமாள் பெயரும் உள்ளதென்றால் சரி. இந்த வழக்கில் பிரதிவாதிகளாக பாண்டியன் மற்றும் ராமையாவின் வாரிசுகள் உள்ளார்கள் என்றால் சரி. நல்லதம்பி நாடாரின் பெயரும் வா.சா.ஆ.4 பட்டாவில் உள்ளதென்றால் சரி. ராமையா மற்றும் பாண்டியனிடம் இருந்து எனது தாத்தாவோ தகப்பனாரோ நாங்களோ கிரயம் வாங்கவில்லை என்றால் சரி. அதனால் நல்லதம்பியின் சகோதரர்களுக்கு உரிமை இருந்து வருகிறது என்றால் தெரியாது. சாட்சி தற்போது சரியல்ல என்று கூறுகிறார். கோயிலானது நல்லதம்பியின் குடும்பகோயில் என்றால் சரியல்ல. அந்த கோயிலை நல்லதம்பியின் குடும்பத்தினர் 4 தலைமுறையாக வழிபட்டுவருகின்றனர் என்றால் சரியல்ல. எனக்கு குடும்ப கோயில் அகஸ்தீஸ்வரத்தில் உள்ளதென்றால் 3 குடும்பகோயில் உள்ளது. வழக்கு சொத்தில் உள்ள

கோயில் எனது குடும்பகோயில் என்று விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன்.

வழக்கு கோயிலானது 1,2 பிரதிகளின் சொத்திற்கு வடக்கு பக்கம் உள்ளது. எனது அப்பாவிற்கு பூர்வீகமாக கிடைத்த சொத்தின் அளவை குறிப்பிட்டு நான் பிராதில் சொல்லவில்லை என்றால் சரி. எந்த வகையில் பூர்வீகமாக கிடைத்ததென்று சொல்லவில்லை என்றால் சரி. பாண்டியனின் மக்கள் கூலிவேலை செய்யும் மக்கள் என்றால் சரி. அவர்களது வீடு கோயிலில் இருந்து 100 மீட்டர் தொலைவில் உள்ளதென்றால் சரியல்ல 30 மீட்டரில் உள்ளது. வா.சா.ஆ.7 அடங்கல் 74/1 சி யில் கிணறு உள்ளதாக சொல்லப்பட்டுள்தென்றாலும் 75/1 ல் கிணறோ கோயிலோ இருப்பதாக சொல்லப்படவில்லை என்றாலும் எனக்கு அடங்கல் பார்க்க தெரியாது. 75/1 ல் தென்னை மரங்கள் மட்டுமே இருப்பதாக அடங்கலில் சொல்லப்பட்டுள்ளதென்றால் தெரியாது. தென்னைமரம் பட்டுபோய்விட்டது தற்போது இல்லை. எங்கள் குடும்பம் வழக்கு சொத்து பகுதியில் செல்வாக்கான குடும்பம் என்றால் சரி. எங்கள் குடும்பத்தில் உள்ள அதிகாரம் மற்றும் செல்வாக்கை பயன்படுத்தி அடங்கலை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. 9 சென்ட்டிற்கு காம்பவுண்ட் கட்டியதாக சொல்லியிருப்பதில் யார் கட்டினார் என்றால் என் அப்பா கட்டினார்.

நான் சொல்வது போல் வழக்கு சொத்து ஸ்தலத்தில் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பார்வையிட ஆணையர் நியமனம் செய்ய தயாராக உள்ளேன். வா.சா.ஆ.3 ஆவணம் என் பெயருக்கு பட்டா ஏற்படுவதற்கு முன் ஏற்பட்ட ஆவணம் என்றால் சரி. வா.சா.ஆ.3 க்கு பின் தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரி. அதற்கு முந்தைய நிலவரி செலுத்திய ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கோயிலில் உள்ள சாமிகளின் பெயர்களை எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் உரிமையை அபகரிக்க பூர்வீகமாகவும் விலை ஆதாரத்தின் மூலமும் எனது அப்பாவிற்கு கிடைத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கோயில் பிரதிகளால் பராமரிக்கப்பட்டு பூஜைகள் செய்யபடுகிறது என்றால் சரியல்ல.

வருடத்தில் ஒரு நாள் கொடைவிழா நடக்கும். சாட்சி தற்போது 2 நாள் கொடை விழா நடக்கும் என கூறுகிறார். திருவிழாவிற்கு காவல்நிலையத்தில் அனுமதி பெறுவோமா என்றால் ஒலிபெருக்கி வைப்பவரே அனுமதி பெறுவார். 2022ல் கொடைவிழா நடந்தது என்றால் சரி. மாடுகட்டிவிளையில் மன்னர் ராஜா கோயில் என்று ஒரு கோயில் மட்டுமே உள்ளதென்றால் எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் 3ம் பிரதி 2022ல் வழக்கு சொத்து கோயிலில் கொடைவிழா நடத்த வாங்கிய காவல்நிலைய அனுமதி மற்றும் அழைப்பிதழ் என்றால் சரி. அது **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யபடுகிறது. 3ம் பிரதி தான் வழக்கு சொத்து கோயிலில் கொடைகாலத்தில் ஒலிப்பெருக்கி வைக்கும் நபர் ஆவார். நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.